### வர்த்தகம் மற்றும் தொழிற்துறையில் செயல்பட்டு வரும் புத்தாக்க நிறுவனங்களில்

# பெண்கள், தாழ்த்தப்பட்டோர் - பட்டியலின மக்களின் பங்களிப்பை அதிகரிக்க திட்டங்கள் ஏதேனும் உள்ளதா?

## மக்களவையில் – எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!



சென்னை, மார்ச் 13-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 10.3.2026 அன்று மக்களவையில், தொழிற்துறையில் செயல்பட்டு வரும் புத்தாக்க நிறுவனங்களில் பெண்கள், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் பங்களிப்பை அதிகரிக்க, ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளதா? என்றும் பிற்படுத்தப்பட்டோரின் நலனைப் பாதுகாக்க ஏதேனும் முயற்சிகள் உள்ளதா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் வர்த்தகம் மற்றும் தொழிற்துறை இணையமைச்சர் ஜிதின் பிரசாதா அவர்களிடம் விரிவான கேள்வி எழுப்பினார். ஒன்றிய அரசின் வர்த்தகம் மற்றும் தொழிற்துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில பின்வருமாறு:-

கடந்த சனவரி 2026 மாத நிலவரப்படி, இந்தியா முழுவதும் 2,12,283 புத்தாக்க நிறுவனங்கள் செயல்பட்டு வருவதாகவும், தமிழ்நாட்டில் மட்டும் 14,099 வர்த்தக நிறுவனங்கள் செயல்படுகின்றன என்றும், இவற்றில் பெண் இயக்குனர்களை கொண்ட புத்தாக்க நிறுவனங்கள் இந்தியா முழுவதுமாக 1,02,054 நிறுவனங்கள் உள்ளன என்றும், தமிழ்நாட்டில் 7042 நிறுவனங்கள் பெண்களை இயக்குனர் களாக கொண்டு செயல்பட்டு வருகின்றன என்று இணையமைச்சர் தெரிவித்தார்.

மேலும், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்துறையின் சார்பில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் பல்வேறு நிதியுதவி மற்றும் வங்கி கடன்கள் ஆகியன வழங்கப்பட்டு வருவதாகவும், சிறுபான்மைத் துறையினரின் மூலம் தொழில் முனைவோருக்கான பிரதம மந்திரி சூரிய ஒளி மின்சார திட்டம், திறன் மேம்பாட்டு பயிற்சிகள், கடன் வசதிகளில் முன்னுரிமை, சந்தை வாய்ப்புகளை உருவாக்கி தருதல் ஆகிய வசதிகள் செய்து தரப்படுகின்றன என்று மக்களவையில் தெரிவித்தார்.

திறன் மேம்பாட்டு அமைச்சகத்தின் மூலம் தொழில் முனைவோருக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி வகுப்புகள், கணிணி மூலம் சந்தை வாய்ப்புகள், பழங்குடியினருக்கான நிதியுதவி என பல்வேறு முயற்சிகள் புத்தாக்க நிறுவனங்களுக்கு அளிக்கபடுதிறது என்றும், சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் சார்பில், பிற்படுத்தப்பட்டோர், மற்றும் தாழ்த்தப்பட்டோர், தொழில் துவங்க தேவையான கடன் வசதிகள், மற்றும் நிதிச் சலுகைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் நிதிச் சேவைகள் துறையின் சார்பில் பல்வேறு வங்கிகள் மூலம் ரூபாய் 10 இலட்சத்திலிருந்து 1 கோடி வரை கடன் வசதி அளிக்கப்பட்டு வருகிறது என்றும் இணையமைச்சர் தெரிவித்தார்.

கடன் உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் இந்தியா முழுவதும் ரூபாய் 808 கோடிகள் அளவிற்கு நிதி உறுதியளிப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், தமிழ் நாட்டிற்கென ரூபாய் 85 கோடிகள் அளவிற்கு புத்தாக்க நிறுவனங்களுக்கு கடன் உறுதியளிப்பு வழங்கப்பட்டுள்ளது என்று ஒன்றிய அரசின் மாண்புமிகு வர்த்தகம் மற்றும் தொழிற்துறை இணையமைச்சர் திரு ஜிதின் பிரசாதா அவர்கள் மக்களவையில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலளித்தார்.

### சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ்

# தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசின் நிதி நிலுவையில் உள்ளதா?

## மக்களவையில் - தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!



புதுடெல்லி, மார்ச் 13-

மக்களவையில் சமக்ர சிக்ஷா (Samagra Shiksha) திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய ஒன்றிய அரசின் நிதி நிலுவை குறித்து தென் சென்னை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பினார்.

அதன் விபரம் :

2024-25ஆம் ஆண்டிற்கான சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய ஒன்றிய நிதி நிலுவையில் உள்ளதா? கடந்த மூன்று ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட, வழங்கப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள நிதி விவரங்கள் என்ன?

மேலும், சுமார் ரூ.3,548 கோடி தொகை தமிழ்நாட்டிற்கு நிலுவையில் உள்ளதாக கூறப்படுவது உண்மையா? இதில் 2024-25ஆம் ஆண்டுக்கான ரூ.2,152 கோடி பங்கும் அடங்குமா? தேசிய கல்விக் கொள்கை அமல்படுத்துதல் அல்லது PM SHRI திட்டத்தில் இணைவது போன்ற நிபந்தனைகள் சமக்ர சிக்ஷா திட்ட நிதி விடுவிப்புடன் தொடர்புள்ளதா? மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான பள்ளிக் கல்வி திட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற நிலுவையில் உள்ள நிதியை விடுவிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதா? என்ற கேள்விகளை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய கல்வி அமைச்சகத்தின் இணை அமைச்சர் திரு.ஜெயந்த் சௌதரி அளித்த பதில்:

கல்வி என்பது இந்திய அரசியலமைப்பின் ஒருங்கிணைந்த பட்டியலில் உள்ள துறையாகும். தேசிய கல்விக் கொள்கை 2020 நாட்டின் கல்வி அமைப்பில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. 2021ஆம் ஆண்டில் சமக்ர சிக்ஷா திட்டம் NEP 2020க்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்டது.

PM SHRI திட்டம் 2022ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதாகவும், NEP 2020 கூறுகளை எடுத்துக்காட்டும் மாதிரி பள்ளிகளை உருவாக்குவதே அதன் நோக்கம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் தமிழ்நாடு அரசு PM SHRI திட்டத்தில் இணைவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு, ஆண்டு வேலைத் திட்டம் மற்றும் பட்ஜெட் (AWP&B) ஒப்புதல், பயன்பாட்டு சான்றிதழ்கள், கணக்காய்வு அறிக்கைகள், மாநில பங்கு உள்ளிட்ட நடைமுறைகளின் அடிப்படையில் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு NEP 2020ஐ முழுமையாக அமல்படுத்தவில்லை என்றாலும், மாணவர்களின் கல்வி தேவைகளை கருத்தில் கொண்டு 'RTE Entitlements' கூறின் கீழ் ஒன்றிய நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ரூ.538.39 கோடி மத்திய பங்கு தமிழ்நாடு அரசிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இதில் 2024-25ஆம் ஆண்டுக்கான ரூ.362.81 கோடியும், 2025-26ஆம் ஆண்டிற்கான முதல் மற்றும் இரண்டாம் தவணையாக ரூ.175.58 கோடியும் அடங்கும்.

கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட மத்திய நிதி விவ ரங்கள்: 5.3.2026 நிலவரப்படி,

2023-24: ஒதுக்கீடு ரூ.2,120.25 கோடி; விடுவிப்பு ரூ.1,871.96 கோடி.

2024-25: ஒதுக்கீடு ரூ.2,151.59 கோடி; விடுவிப்பு ரூ.362.81 கோடி (2025-26இல் விடுவிப்பு).

2025-26: ஒதுக்கீடு ரூ.1,896.42 கோடி; விடுவிப்பு ரூ.175.58 கோடி மீதமுள்ள நிதி வழக்கமான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின் விடுவிக்கப்படும் என்றும் பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### எல்.பி.ஜி. விநியோகம் பெருமளவில் பாதிப்பு:

# போர்க்கால அடிப்படையில் நிலைமையை சரி செய்யவேண்டும்!

## மக்களவையில் - டி.எம்.கதிர்ஆனந்த் பேச்சு!



புதுடெல்லி, மார்ச் 13-

எல்.பி.ஜி. விநியோகம், நாட்டில் குறிப்பாக தமிழ் நாட்டில், பெருமளவு பாதிக்கப்பட்டு வர்த்தக நிறுவனங்களும், இல்லத்தரசிகளும் பெரும் துயருக்கு உள்ளாகி உள்ளனர். அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே ஒன்றிய அரசு போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு நிலைமையை சரி செய்ய வேண்டும் என்று மக்களவையில் வேலூர் தொகுதிகளில் டி.எம். கதிர் ஆனந்த் வலியுறுத்தினார்.

இது தொடர்பாக டி.எம். கதிர்ஆனந்த் பேசியதாவது:-

வணிக பயன்பாட்டு சிலிண்டர் விலை உயர்வு மற்றும் தட்டுப்பாட்டினால் தவிக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிறு குறு உணவு உணவகங்கள்!

வணிக பயன்பாட்டுக்கான விலை உயர்வு எதிரொலியால் LPG சிலிண்டர் விநியோகம் பல இடங்களில் திடீரெனநிறுத்தப்பட்டிருப்பது கவலையளிக்கிறது.

வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் அண்டை மாவட்டங்களில் உற்பத்தி பொருளாதாரத்தை நம்பி பயணித்துவரும் மக்களுக்கு வாழ்வாதாரமாக விளங்கும் சிறு உணவகங்கள் தினசரி தேவைகளைக் கூட பூர்த்தி செய்துகொள்ள முடியாமல் திணறி வருகின்றனர். பல உணவக உரிமையாளர்கள் தங்களது கடைகளை மூடும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த சிலிண்டர்களை நம்பி தான் ஆயிரக்கணக்கான சிறு உணவகங்கள், டீ கடைகள், பேக்கரிகள், தள்ளுவண்டி கடைகள் போன்ற ஆயிரக்கணக்கான சிறு குறு உணவு உற்பத்திக் கூடங்கள் தினசரி இயங்கி வருகின்றன. எப்போது விநியோகம் சீராகும் என்ற தகவல் கூட நம்பகமான செய்தியாக வெளியிடப்படாத நிலையில் பதற்றமான சூழல் நிலவுகிறது.

ஏற்கனவே Commercial LPG விலை 115 ரூபாய் விலையேறி விண்ணை முட்டிய நிலையில், இதற்கான தட்டுப்பாடு ஏற்படும் என்பதை உணர்ந்து ஒன்றிய அரசு கையிருப்பை உறுதி செய்தும், உற்பத்தியின் அளவையும் அதிகரித்திருக்க வேண்டும்! இப்போது ஒட்டுமொத்த விநியோகமே கேள்விக்குள்ளாவது சிறு தொழிலாளர்கள் மற்றும் வியாபாரிகளின் வாழ்வாதாரத்தையே முடக்கி விடும்!

இது சாதாரண நிர்வாக ரீதியான தவறு அல்ல!

இது சிறு குறு தொழில்கள் மீது தம் முதலாளிகளுக்கு ஆதரவாக ஒன்றிய அரசு நேரடியாக மேற்கொள்ளும் Corporate Surgical Strike!

உள்ளூர் அளவிலும் சரி உள்நாட்டு பொருளாதார பங்களிப்பிலும் சரி மிகப் பெரிய அளவில் பங்களிக்கும் இதுபோன்ற உணவகங்கள் முடங்கிப்போவதால் பல்லாயிரக்கணக்கானோர் வேலையிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது!

பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழும் சிறு மற்றும் நடுத்தர தொழில்கள்மீது எந்த அளவிற்கு அலட்சியமான அணுகுமுறையை ஒன்றிய அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதை இது வெளிப்படையாக சுட்டிக்காட்டுகிறது.

ஒன்றிய பெட்ரோலியத் துறை அமைச்சகம் உடனடியாக விளக்கம் அளித்து, கையிருப்பு எவ்வளவு உள்ளது மற்றும் தற்போதைய தேவைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் LPG விநியோகத்தை தங்குதடையின்றி மேற்கொள்ள போர்க்கால அடிப்படையில் வழிவகை செய்ய வேண்டும்!

ஆயிரக்கணக்கானோர் நம்பியுள்ள சிறு உணவக உரிமையாளர்களின் வாழ்வாதாரம் உங்களது நிர்வாக சீர்கேட்டால் நாங்கள் அனுமதிக்க முடியாது.

ஒன்றிய அரசு உடனடியாக இவ்விவகாரத்தில் தலையிட்டு தங்கு தடையற்ற வணிக பயன்பாட்டு LPG சிலிண்டர் விநியோகத்தை குறிப்பாக தமிழ்நாடு அளவிலான சமநிலையை ஏற்படுத்த உறுதி செய்திட வேண்டும்!

இவ்வாறு அவர் பேசினார்

# கோவை - ஈரோடு MEMU ரயிலை சேலம் வரை நீட்டிக்கும் கோரிக்கையை நிராகரிப்பதா?

## ரயில்வே திட்டங்களில் தமிழ்நாட்டை திட்டமிட்டுப் புறக்கணிக்கும் ஒன்றிய அரசு – கே.இ. பிரகாஷ் எம்.பி. கண்டனம்!



புதுடெல்லி, மார்ச்.13-

கோவை ஈரோடு இடையே இயக்கப்படும் MEMU 66601/02 ரயிலை, கரூர் மற்றும் நாமக்கல் வழியாக சேலம் வரை நீட்டிக்கக் கோரும், ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்ட மக்களின் நீண்டகால கோரிக்கை பற்றி நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

இதற்கு அந்த கோரிக்கையை பரிசீலிப்பதற்கான சிறுநாட்டமும் இல்லாமல் உடனடியான, திமிரான நிராகரிப்பு பதிலை ஒன்றிய அரசு அளித்துள்ளது. ஈரோடு, நாமக்கல் ஆகிய இரண்டு மாவட்ட மக்களின் பல ஆண்டுகால முக்கியமான கோரிக்கையை இப்படி உதாசீனமாக அணுகியிருப்பதற்கு, என்னுடைய வன்மையான கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

1. ஏற்கனவே இருக்கும் எக்ஸ்பிரஸ் ரயில்களைக் காட்டி அலட்சியம்:

கோவை -ஈரோடு MEMU ரயில் சேவையைச் சேலம் வரை நீட்டிப்பது என்பது வெறும் ரயில்வே கோரிக்கை மட்டுமல்ல. இது குமாரபாளையம் நாமக்கல் பகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான கல்லூரி மாணவர்கள், சிறு குறு தொழிலாளர்கள் மற்றும் நாமக்கல் ஆஞ்சநேயர் கோயில் உள்ளிட்ட ஆன்மீகத் தலங்களுக்குச் செல்லும் பக்தர்களின் மிக முக்கியமான போக்குவரத்துத் தேவை.

ஆனால், ஒன்றிய அரசு தனது பதிலில் ஏற்கனவே அந்த வழித்தடத்தில் இயங்கும் சில எக்ஸ்பிரஸ் ரயில்களைப் பட்டியலிட்டு, இந்த கோரிக்கையை நிராகரித்துள்ளது. நீண்ட தூரம் செல்லும் எக்ஸ்பிரஸ் ரயில்கள், சாதாரண ஏழை எளிய மக்கள் மற்றும் அன்றாடம் பயணம் செய்யும் மாணவர்களுக்கு நடைமுறையில் பெரிதாக பயன்படாது என்ற உண்மையை ஒன்றிய அரசும் ரயில்வே அமைச்சகமும் உணராமல் இருக்கின்றன.

2. ரயில்வே கட்டமைப்பு திட்டங்களில் திட்டமிட்டு புறக்கணிக்கப்படும் தமிழ்நாடு:

இந்த ஆண்டுக்கான ரயில்வே பட்ஜெட்டில் உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு 20000 கோடி, 15000 கோடி என அள்ளி வழங்கிய ஒன்றிய அரசு, தமிழ்நாட்டிற்கு அதில் பாதியளவு கூட வராத 7000 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கியது. நாட்டின் ஜிடிபிக்கு மிகமுக்கியப் பங்கை வழங்கும் தமிழ்நாட்டிற்கு இது ஏற்க முடியாத அநீதி என்று பல வல்லுநர்கள் விமர்சித்தார்கள்.

இந்த நிலையில், தற்போது ஈரோடு முதல் தமிழ்நாடெங்கும் மக்களின் தேவைக்கும் மாநிலத்தின் வளர்ச்சிக்கும் அவசியமான ரயில்வே கட்டமைப்பையும் உருவாக்க ஒன்றிய அரசு மறுப்பு தெரிவிக்கிறது.

ஒன்றிய அரசின் இந்த மாற்றாந்தாய் மனப்பான்மைக்கு எதிராகவும், தமிழ்நாட்டின் ரயில்வே உரிமைக்காகவும், நாடாளுமன்றம் மற்றும் மக்கள் மன்றத்தில் எமது குரல் தொடர்ந்து ஒலிக்கும்!

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் குன்றாண்டார்கோவில் மத்திய ஒன்றியம் அண்டக்குளம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஆர்.சி. வீரமணி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தினார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர் குளவாய்ப்பட்டி சி.சண்முகம், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் டி.செல்வம், ஒன்றிய கழக நிர்வாகிகள் டி.முத்து, ஜி.சின்னப்பா, வீரக்குடி ராஜ்குமார், எஸ்.ஆர்.எஸ். முத்துக்குமார், ஆர்.சி.வி.வினோத் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### வெளிநாட்டுக் கடன்களைச் சமாளிப்பதில்

# ஒன்றிய அரசின் முன்முயற்சிகள் போதுமான அளவில் உள்ளதா?

## மாநிலங்களவையில் – எஸ்.ஆர். சிவலிங்கம் கேள்வி!



புதுடெல்லி. மார்ச் 13-

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் அவர்கள் 10 மார்ச் 2026 அன்று மாநிலங்களவையில் வெளிநாட்டு கடன்களை சமாளிப்பதில் ஒன்றிய அரசு தேவையான முன்முயற்சி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா? என்றும் அந்நிய செலவாணி கையிருப்பை உறுதிப்படுத்திக் கொள்ள உரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளதா? என்றும், அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் நிதித் துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி அவர்களிடம் கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் நிதித் துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:-

கடந்த செப்டம்பர் 2025, நிலவரப்படி இந்திய அரசின் வெளிநாட்டு கடன்களின் செலவு 74600 கோடிகள் அமெரிக்க டாலர்களாக உள்ளது என்றும், இவற்றில் சர்வதேச குறுகிய கால கடன்கள், வர்த்தகத் துறை சார்ந்த கடன்கள் ஆகிய அனைத்தும் அடங்கும் என்றும், வெளிநாட்டு கடன்கள் மற்றும் நாட்டின் மொத்த உற்பத்தி பெருக்கத்திற்கான விகிதாச்சார அளவு 19 சதவீதமாக உள்ளது என்றும்

கடன் அடைக்கும் விகிதம் தற்போது ஆறு சதவீத அளவிற்கும் கட்டுக்குள் உள்ளது என்றும், வெளிநாட்டு வாழ் இந்தியர்களின் பணமதிப்பு அதிகரித்துள்ளது என்றும், அந்நிய செலாவணி கையிருப்பு போதுமான அளவு உள்ளது என்றும் ஒன்றிய அரசு தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது என்று ஒன்றிய அரசின் நிதித் துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி அவர்கள் மாநிலங்களவையில் தி.மு.க. மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு பதிலை அளித்துள்ளார்.




கோவை மாவட்டம் வால்பாறை நகராட்சியில் நகர்மன்றத் தலைவர் அழகு சுந்தரவள்ளி தலைமையில் ஆணையாளர் குமரன் முன்னிலையில் நலவாரிய அடையாள அட்டைகளை தூய்மைப் பணியாளர்கள் நலவாரிய தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி வழங்கினார். இதில் வால்பாறை நகரக் கழக செயலாளர் குட்டி (எ) சுதாகர், மாவட்ட தாட்கோ மேலாளர் ரஞ்சித்குமார், நகராட்சி பொறியாளர் ஆறுமுகம், நகராட்சி மேலாளர் செந்தில்வேல், சுகாதார அலுவலர் செந்தில்குமார், ஆய்வாளர் சுரேந்தர், நகரமன்ற உறுப்பினர் வீரமணி உள்பட நகராட்சி அலுவலர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு வடக்கு மாவட்டம் கோபிசெட்டிபாளையம், கொளப்பலூர் பேரூர் அ.தி.மு.க. 11வது வார்டு முன்னாள் கவுன்சிலர் ராசாத்தி உள்ளிட்ட 25 க்கும் மேற்பட்ட அ.தி.மு.க. நிர்வாகிகள் அக்கட்சியிலிருந்து விலகி மாவட்ட செயலாளர் என்.நல்லசிவம் முன்னிலையில் தி.மு.க.வில் தங்களை இணைத்துக் கொண்டனர். நிகழ்வில் கொளப்பலூர் பேரூர் தலைவர் ஆ.அன்பரசு, கோபி தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் எஸ்.ஏ.முருகன், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.வெள்ளியங்கிரி உள்ளிட்ட வார்டு கவுன்சிலர்கள், ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.